**துரை.தியாகராஜன்,** B.Com., B.L., *வழக்கறிஞர்.*
அலு: 84/C, நீதிமன்ற சாலை, தஞ்சாவூர். 9360353596.
வீடு: 38, பூக்கார 3வது வஸ்தா தெரு, தஞ்சாவூர். E-mail:dtmanlaw@gmail.com

---

பெறுநர்:- தேதி:04.05.24

1. திரு. ரெ. ராமசாமி வேளாளர்,
வழக்கறிஞர்,
த/பெ. லேட். ரெங்கசாமி வேளாளர்,
தெற்கு தெரு, வெண்டாக்கோட்டை,
பட்டுக்கோட்டை தாலுக்கா-614906.

2. திரு. கோ. புருசோத்தமன்,
த/பெ. லேட். கோவிந்த வேளாளர்,
மேலத் தெரு, வெண்டாக்கோட்டை,
பட்டுக்கோட்டை தாலுக்கா-614906.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமம், தெற்கு தெரு, க.எண்.116 என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்துக் கொண்டு தற்காலம் Blk-696#09-62, Hougang Street61, Singapore 530696 என்ற முகவரியில் தொழில் நிமித்தமாக வசிக்கும் எனது கட்சிக்காரர் பழனிவேல் வேளாளர் மகன் பிரபாகர் அவர்களிடம் முறையான தகவலை பெற்று அவரின் சார்பாக நான் தங்களுக்கு கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால்:-

1. தங்களுக்கு பட்டுக்கோட்டை தாலுக்கா, வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள TMO15127 அ/மி. சுப்பிரமணிய சாமி திருக்கோவில் உள்ளது என்பதும் அக்கோவில் வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள வேளாளர் சமூகம் மற்றும் கள்ளர் வகுப்பை சேர்ந்த தொண்டமார், முதலியார், சேனைத் தலைவர் வகுப்பை சார்ந்த செட்டியார் ஆகிய நான்கு கரைதாரர்களுக்கு மட்டும் சொந்தமான இனக் கோவில் என்பதும் தாங்கள் அறிந்த ஒன்று என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

2. மேற்படி சுப்பிரமணியசாமி கோவிலின் நிர்வாகம் மற்றும் பராமரிப்புக்காக ஷை கரைதாரர்களில் கண்ட 23குடும்பங்களை சேர்ந்த வாரிசுகள் தங்களுக்குள் பரம்பரை அறங்காவலராக 1. கோவிந்தசாமி வேளாளர், 2. இராஜப்ப வேளாளர், 3. சொக்கலிங்க செட்டியார், 4. கோவிந்த நாயக்கர், 5. ரெங்கசாமி முதலியார் ஆகியோர்களை தேர்ந்தெடுத்து ஒரு ஏற்பாடு செய்து கொண்டு 19.08.11 அன்று அதனை பட்டுக்கோட்டை சார்பதிவகத்தில் செட்டில்மெண்ட் ஆவண எண்.5208/1911-ன்படி பதிவு செய்து கொண்டுள்ளனர் என்பதும் தாங்கள் அறிந்தது என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

3. மேலும் எனது கட்சிக்காரர் ஷை பரம்பரை அறங்காவலர்களில் ஒருவரான கோவிந்தசாமி வேளாளரின் கொள்ளுப் பேரனும் கோவிந்தசாமி வேளாளரின் மகனான

சின்னையன் பேரனும் சின்னையன் மகன் பழனிவேலின் மகனும் ஆவார் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

4. அதே நேரத்தில் தாங்கள் இருவரும் ஷ பரம்பரை அறங்காவலரான இறந்து போன கோவிந்தசாமியின் வாரிசோ அல்லது ராஜப்பா வேளாளரின் வாரிசோ அல்லாத ஆனால் ஷ செட்டில்மெண்ட் ஆவணப்படி கண்ட 23வகையறாக்களில் தங்களில் முதல் நபர் எட்டவதாக உள்ள ராமசாமி வேளாளர் மகன் கோவிந்த வேளாளர் வகையறாவை சேர்ந்த வாரிசு என்றும் மற்றும் தங்களில் இரண்டாவது நபர் இருபத்தி இரண்டாவதாக உள்ள சௌந்தர வேளாளர் மகன் அருணாசல வேளாளர் வகையறாவை சேர்ந்த வாரிசு என்றும் அதன்படி தாங்கள் ஷ கோவிந்தசாமியின் வாரிசோ அல்லது ராஜப்பா வேளாளரின் வாரிசோ அல்லாத நபர்களாக இருப்பதால் தாங்கள் இருவரும் அ/மி. சுப்பிரமணிய சாமி கோவிலின் பரம்பரை அறங்காவலர்களாக போட்டியிடவோ நியமனம் செய்யப்படவோ தகுதியில்லாதவர்கள் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

5. தற்போது ஷ ஐந்து பரம்பரை அறங்காவலர்களின் வாரிசுகளான முறையே கோவிந்தசாமியின் மனைவி வீரசுந்தரி, ஷ இராஜப்பா வேளாளரின் மகன் நடனசபாபதி வேளாளர் மற்றும் சிவகுரு செட்டியர், இராஜேந்திரன் தொண்டமான், திருத்தணிவேல் முதலியார் ஆகியோர் சுப்பிரமணிய சாமி கோவிலின் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருகிறார்கள் என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

6. இந்நிலையில் தங்கள் இருவரின் அரசியல் செல்வாக்கின் காரணமாக அ/மி. சுப்பிரமணிய சாமி கோவிலின் பரம்பரை அல்லாத அறங்காவலர்களாக தங்களில் 2வது நபரையும் மற்றும் தேவி செல்வபாண்டி, கோவிந்தம்மாள் நாகராஜ் ஆகியோரை இந்து சமய அறநிலையத் துறை சட்டவிரோதமாக நியமனம் செய்து விட்டார்கள் என்றும் அதன் காரணமாக பரம்பரை அறங்காவலர்களாக செயல்பட்டு வரும் வீரசுந்தரி, நடனசபாபதி வேளாளர், சிவகுரு செட்டியர், இராஜேந்திரன் தொண்டமான் மற்றும் திருத்தணிவேல் முதலியார் ஆகியோர் தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையரிடம் O.A.7/2024 என்ற வழக்கை தங்கள் மீது தாக்கல் செய்துள்ளனர் என்பதும் தாங்கள் அறிந்ததே என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

7. மேற்படி அ/மி. சுப்பிரமணிய சாமி கோவிலின் மீது மிகுந்த பக்தி கொண்ட எனது கட்சிக்காரர் அதற்கு பல்வேறு அறப்பணிகள் உட்பட செய்து அக்கோவிலின் குறிப்பிடத்தக்க பெரும் நன்கொடையாளராக இருந்தும் கோவிலுக்கு தேர் மற்றும் தேர் செல்லும் பாதைக்கு தார் சாலை உட்பட அமைத்து கொடுத்தும் மேலும் அதன் பல்வேறு உழவாரப் பணிகள் கலந்து கொண்டும் பங்காற்றி உள்ளார் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

8. அந்த வகையில் தற்போது எனது கட்சிக்காரர் கோவிலின் வழக்கு பற்றிய பிரச்சினையில் அக்கறை கொண்டு சரியான நியாயமும் உரிமையும் உள்ள ஷ வீரசுந்தரி வகையறா வழக்கிற்கு ஆதரவாக இருந்து வருகிறார் என்றும் அப்படி

செயல்பட்டு வரும் போது தங்களில் முதல் நபர் ஏற்கனவே தஞ்சாவூர் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையரிடம் தாக்கல் செய்த O.A.5/07-ன் வழக்கு கோப்புகளின் ஆவணங்களை வழக்கறிஞர் மூலம் அதன் சான்றிட்ட நகல்களை பெற்று பரிசீலித்த போது தங்களில் முதல் நபர் பரம்பரை அறங்காவலர்கள் வசமிருந்த ஆவணங்களை மோசடியாக பெற்றும் நகல்கள் பெற்றுக் கொண்டும் தன்னை ஷெ செட்டில்மெண்ட் ஆவணப்படி கண்ட பரம்பரை அறங்காவலர்களில் ஷெ முதல் நபரான இறந்து போன கோவிந்தசாமி வேளாளரின் வழிவந்த வாரிசு என்று உண்மைக்கு மாறான தகவலை தெரிந்தே கொடுத்தும் அதற்கு ஆதரவாக தங்களில் இரண்டாவது நபர் வாக்குமூலம் கொடுத்தும் உள்ளதாக எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

9. மேலும் O.A.5/07 வழக்கில் அ/மி. சுப்பிரமணிய சாமி கோவில் வெண்டாக்-கோட்டை கிராமத்தில் உள்ள வேளாளர் மற்றும் கள்ளர், முதலியார், செட்டியார் ஆகிய நான்கு கரைதாரர்களுக்கு மட்டும் சொந்தமான இனக் கோவில் என்றும் அதற்கு 19.08.11 அன்று செய்து கொண்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.5208/1911-ன் படி கோவிந்தசாமி வேளாளர், ராஜப்ப வேளாளர், சொக்கலிங்க செட்டியார், கோவிந்த நாயக்கர் மற்றும் ரெங்கசாமி முதலியார் ஆகியோர் தான் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வந்தனர் என்றும் தொடர்ந்து அந்த பரம்பரை அறங்காவலர்களின் வழி வந்த வாரிசுகள்தான் அறங்காவலர்களாக வர இயலும் என்று வழக்காடி அதில் தங்களில் முதல் நபர் தன்னை பரம்பரை அறிங்காவலர்களில் ஒருவராக உத்தரவு பெற்று வந்துள்ளீர்கள் என்றும் பின்னிட்டு அதனை எதிர்த்து மாண்புமிகு சென்னை ஆணையர் நீதிமன்றத்தில் A.P.14/2012/D2 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

10. ஆனால் தற்போது தாங்கள் இருவரும் ஷெ O.A.5/2007 வழக்கில் எடுத்த கட்சிக்கும் உண்மைக்கும் மாறாக அரசியல் கட்சியின் செல்வாக்கை பயன்படுத்தி தங்களில் முதல் நபரின் ஆதரவோடு தங்களில் இரண்டாவது நபர் ஷெ அ/மி. சுப்பிரமணியசாமி திருக்கோவிலின் பரம்பரையல்லாத அறங்காவலர்களில் ஒருவராக நியமனம் பெற்று வந்துள்ளார் என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

11. தாங்கள் இருவரும் பதவிக்காகவும் ஆதாயத்திற்காகவும் இந்து சமய அறநிலையத் துறை சட்டம் மற்றும் விதிகளுக்கும் மற்றுமுள்ள சட்டக் கடப்பாடுகளுக்கும் எதிராக உண்மைக்கு மாறான தகவல்களை இந்து சமய அறநிலையத் துறை அலுவலகத்திடமும் மற்றும் நீதிமன்றத்திலும் அளித்துள்ளீர்கள் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

12. தங்களில் முதலாவது நபர் மேற்சொன்ன வகையில் எனது கட்சிக்காரரின் முன்னோர்களின் வாரிசு என்றும் அதனை ஒப்புக் கொண்டு தங்களில் 2வதுநபர் வாக்கு-மூலம் அளித்திருப்பது எனது கட்சிக்காரரின் முன்னோர்களையும் குடும்பத்தினரையும் ஏமாற்றும் விதமாக எவ்வகையிலும் ஈடுசெய்ய முடியாத வகையில் அவமானப்படுத்தி உள்ளதாக எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

13. இதனால் எனது கட்சிக்காரர் சமூகத்தின் மத்தியில் பெருத்த அவமானமும் மிகுந்த மனஉளைச்சலும் அடைந்துள்ளார். தங்களில் முதல் நபர் எனது கட்சிக்காரரின் முன்னோர்களின் வழி வந்த வாரிசு என்று ஆள்மாறாட்டம் செய்துள்ளார். அதற்கு தங்களில் 2வதுநபர் உடந்தையாக இருந்து உண்மைக்கு மாறான தகவல்களை வாக்குமூலமாக ஷை கோவிலின் ஆய்வாளர் முன்பு வழக்கிற்காக கொடுத்து அதன் மூலம் நீதிமன்றத்தை திசை திருப்பி தவறான உத்தரவை O.A.5/07-ல் பெற்றுள்ளார்.

எனவே இந்த அறிவிப்பை கண்டவுடன் ஷை குற்றச்சாட்டுகளுக்கு தாங்கள் நம்ப தகுந்த உரிய விளக்கத்தை அளிக்கும்படியம் அல்லது நடந்த செயல்களுக்கு உரிய மண்ணிப்பை பகிரங்கமாக விளம்பரப்படுத்தி தெரிவிக்கும்படியம் தவறினால் எனது கட்சிக்காரர் தங்களின் ஷைசெயல்களுக்காக இ.தச. பிரிவுகள் 193, 205, & 209-ன்படி இணை ஆணையர் முன்பு சி.ஆர்.பி.சி. பிரிவு.340-ன்படி உரிய புகார் மனு அளித்தும் மற்றும் 15இலட்சம் நட்டஈடு கேட்டும் சட்டப்பூர்வ கிரிமினல் மற்றும் சிவில் நடவடிக்கை எடுக்க தள்ளப்படுவார் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு,

Regd. Notice with A/D

To,

திரு. ரெ.ராமசாமி அவர்கள்,
வழக்கறிஞர்,
த/பெ. ரெங்கசாமி வேளாளர்,
தெற்கு தெரு,
பட்டுக்கோட்டை தாலுக்கா,-614906.

From,
***Mr. Durai Thiyagarajan,***
Advocate B.Com, B.L.
38, Pookara 3rd Vastha St,
Thanjavur-1. 9360353596.